முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் இராமானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

19.02.2019, செவ்வாய்க்கிழமை

1. **சுத்தநெறி படை கொண்ட அரங்கா**
**சுப்பிரமணியரின் ஞானம் அருளி**
**சத்திய வழி காட்டி மக்களிடை**
**சன்மார்க்கம் வளர்க்கும் தேசிகா**

2. தேசிகாய நமஹ எனும் செபதபம்
தேசமெங்கும் ஒலிக்கப்படவே
ஆசிகள் தந்து ஆறுமுகன் துணைபட
அகிலமே காக்கப்படும் என்று கூறி

3. கூறியே நித்ய பிரசன்ன ஆசி
குறையிலா **விளம்பி சால் திங்கள்**
**தெரியவே சப்தம திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 7ம் நாள் 19.02.2019, செவ்வாய்க்கிழமை)**
**தேசிகனுக்கு இராமானந்தர் யானும்**

4. யானும் மக்கள் நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் ஏற்றும்
ஞானசோதி சரவண சோதியை
நாட்டிடுவேன் உலகோர் வணங்கிவர

5. வருகவே வையகம் தானும் மாறும்
வளரும் ஞானயுகம் ஆகவே
முருகா எனும் செபதபம் போற்றி
முழுமதி பூசை கலந்து வருதலுற

6. வருதலுற முழுமை ஞான பலமும்
வள்ளல் தன்மை கூட்டுகின்ற
தருமபலம்தனை பெருக்கி வர
தடைகள் இல்லா கலந்து வர

7. வருகவே தரும பலமுடன் ஞானபலம்
வரும் மக்கள் எல்லாம் அடைந்து
ஆறுமுக அரங்க ஞானி தயவில்
அனைவரும் ஞானியாகும் வாய்ப்பு பெறுவர்

8. வாய்ப்பு தந்து வழிகாட்டிட
வல்லமை கூட்டி அருள்புரிந்திட
மெய்ஞான தீட்சை தன்னை
முழுமதி காலம் வந்து ஏற்றிட

9. ஏற்றிட அழியாமை ஞானமும்
என்றும் அழிவிலா பாதுகாப்பும்
ஆற்றல்மிக்க குருவருள் துணையும்
அடைந்து உலகோர் சிறப்பு காண்பர்

10. காண்கவே கலிகால மக்களே
கந்தமகா பலம் வளம்பெற
உண்மை ஞானமாம் அரங்கன்
உயர்வழியே அருள் தயவு நெறியாம்

11. நெறி பிறழா தொடர்ந்து வர
நிம்மதி தரும் தருமம் பெருக்கிவர
அறியாமை அகலும் அழியாமை எனும்
அற்புதம் வருபவர்க்கு நடந்தேறும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–